சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ம் நாள் வியாழக்கிழமை

**இ.நி.ம.எண்.01/2023**

**இன்**

**அசல் வழக்கு எண்.38/2017**

G.ராமு .... மனுதாரர்/வாதி

**// எதிராக //**

R.சிற்றரசு ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 17.02.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சுந்தரராஜு,எம்.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.காந்தி,பி.காம்.,எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மேற்படி வழக்கில் 07.02.2023 ம் தேதி மனுதாரர்/வாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட டிஸ்மிஸ் பார் டிபால்ட் உத்தரவை ரத்து செய்து மேற்படி வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 9 ன் கீழ் மனுதாரர்/வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்க/வாதி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்: -**

(i) தான் மேற்படி வழக்கில் மனுதாரர் / வாதி ஆவேன் என்றும், கனம் கோர்ட்டில் தான் எதிர்மனுதார்/ பிரதிவாதிக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், மேற்படி வழக்கு தன் தரப்பில் கட்டாய விசாரணைக்காக கடந்த 07.02.2023--ம் தேதியில் போடப்பட்டிருந்தது என்றும், அன்றைய



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.26 17:03:50 +0530

தேதியில் தான் வியாபார சம்பந்தமாக வெளியூரில் இருந்ததால் நீதிமன்றத்தில் உரிய நேரத்தில் ஆஜராக இயலாமல் போய்விட்டது என்றும், தன்னால் உரிய நேரத்தில் தனது வழக்கறிஞருக்கும் சரியான தகவல் கொடுக்க இயலவில்லை என்றும், அதனால் கடந்த 07.02.2023-ம் தேதியில் தனக்கு எதிராக டிஸ்மிஸ் பார் டிபால்ட் உத்தரவு கனம் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி வழக்கில் ஏற்பட்டுள்ள டிஸ்மிஸ் பார் டிபால்ட் உத்தரவு தன்னால் வேண்டுமென்றே ஏற்பட்டவை அல்ல என்றும், தன் சக்திக்கு அப்பாற்பட்டு ஏற்பட்டவையாகும் என்றும், மேற்படி வழக்கில் தனக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது என்றும், மேற்படி வழக்கை எப்போதும் நடத்த நான் தயாராக உள்ளேன் என்றும், ஆகையால் கனம் கோர்ட்டாராவர்கள் தயவு கூர்ந்து மேற்படி வழக்கில் 07.02.2023-ம் தேதி தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட டிஸ்மிஸ் பார் டிபால்ட் உத்தரவை ரத்து செய்து மேற்படி வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்றும், இல்லாவிடில் தனக்கு ஈடுசெய்ய முடியாத பெருந்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்று மனுதாரர்/வாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

3. <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>: -

(i) மனுதாரரின் மனு பொய், மோசம், சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடியாக வேண்டியது. இந்த எதிர்மனுதாரர் தான் இங்கு யுக்தமாய் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

(ii) மனு அபிடவிட் பாரா 2-ல் கண்ட சங்கதிள் சரியல்ல. மனுதாரர் எதிர்மனுதாரர் மீது ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதும் மேற்படி வழக்கு மனுதாரர் தரப்பில் கட்டாய விசாரணைக்காக 07.02.2023-ம் தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது என்பதும் உண்மை. மேற்படி தேதியில் மனுதாரர் வியாபார



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.26 17:03:53 +0530

சம்மந்தமாக வெளியூரில் இருந்ததால் நீதிமன்றத்தில் உரிய நேரத்தில் ஆஜராக இயலாமல் போய்விட்டது என்பதும் உரிய நேரத்தில் அவரது வழக்கறிஞருக்கும் சரியான தகவல் கொடுக்க இயலவில்லை என்பதும் முற்றிலும் தவறாகும்.

(iii) தாவா 07.02.2023-ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக டிஸ்டமிஸ் பார் டிபால்ட் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது உண்மை. மேற்படி வழக்கில் ஏற்பட்டுள்ள டிஸ்மிஸ் பார் டிபால்ட் உத்தரவு மனுதாரரால் வேண்டுமென்றே ஏற்பட்டவை அல்ல என்பதும் மனுதாரரின் சக்திக்கு அப்பாற்பட்டு ஏற்பட்டவை என்பதும் மேற்படி வழக்கில் மனுதாரருக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது என்பதும் மேற்படி வழக்கை எப்போதும் நடத்த மனுதாரர் தயாராக உள்ளார் என்பதும் ஆகவே தாவாவை கோப்புக்கு எடுக்க வேண்டுமென்பதும் தவறாகும்.

(iv) தாவாவை நடத்தினால் மனுதாரருக்கு வெற்றி பெறும் வாய்ப்பு சிறிதும் இல்லை என்பதால் மனுதாரர் வேண்டுமென்றே தாவாவை/நடத்தாமல் தள்ளுபடிக்கு விட்டுவிட்டு தற்பொழுது பொய்யான சங்கதிகளுடன் மனு தாக்கல் செய்துள்ளார். எனவே, கனம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>** : -

**5.** மேற்படி வழக்கில் 07.02.2023 ம் தேதி மனுதாரர்/வாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட டிஸ்மிஸ் பார் டிபால்ட் உத்தரவை ரத்து செய்து மேற்படி வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 9 ன் கீழ் மனுதாரர்/வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.26 17:03:55 +0530

**6.** மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிருரையில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, பிரமாண வாக்குமூலம், பதிலுரை, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/வாதி தான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், தான் மேற்படி வழக்கில் மனுதாரர் / வாதி ஆவேன் என்றும், கனம் கோர்ட்டில் தான் எதிர்மனுதார்/ பிரதிவாதிக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், மேற்படி வழக்கு தன் தரப்பில் கட்டாய விசாரணைக்காக கடந்த 07.02.2023--ம் தேதியில் போடப்பட்டிருந்தது என்றும், அன்றைய தேதியில் தான் வியாபார சம்பந்தமாக வெளியூரில் இருந்ததால் நீதிமன்றத்தில் உரிய நேரத்தில் ஆஜராக இயலாமல் போய்விட்டது என்றும், தன்னால் உரிய நேரத்தில் தனது வழக்கறிஞருக்கும் சரியான தகவல் கொடுக்க இயலவில்லை என்றும், அதனால் கடந்த 07.02.2023--ம் தேதியில் தனக்கு எதிராக டிஸ்மிஸ் பார் டிபால்ட் உத்தரவு கனம் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி வழக்கில் ஏற்பட்டுள்ள டிஸ்மிஸ் பார் டிபால்ட் உத்தரவு தன்னால் வேண்டுமென்றே ஏற்பட்டவை அல்ல என்றும், தன் சக்திக்கு அப்பாற்பட்டு ஏற்பட்டவையாகும் என்றும், மேற்படி வழக்கில் தனக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது என்றும், மேற்படி வழக்கை எப்போதும் நடத்த நான் தயாராக உள்ளேன் என்றும், ஆகையால் கனம் கோர்ட்டாராவர்கள் தயவு கூர்ந்து மேற்படி வழக்கில் 07.02.2023-ம் தேதி தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட டிஸ்மிஸ் பார் டிபால்ட் உத்தரவை ரத்து செய்து மேற்படி வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது என்றும், இல்லாவிடில் தனக்கு ஈடுசெய்ய முடியாத பெருந்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்று மனுதாரர்/வாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.26 17:03:58 +0530

**7.** எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில், மனு அபிடவிட் பாரா 2-ல் கண்ட சங்கதிள் சரியல்ல என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர் மீது ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதும் மேற்படி வழக்கு மனுதாரர் தரப்பில் கட்டாய விசாரணைக்காக 07.02.2023-ம் தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது என்பதும் உண்மை என்றும், மேற்படி தேதியில் மனுதாரர் வியாபார சம்மந்தமாக வெளியூரில் இருந்ததால் நீதிமன்றத்தில் உரிய நேரத்தில் ஆஜராக இயலாமல் போய்விட்டது என்பதும் உரிய நேரத்தில் அவரது வழக்கறிஞருக்கும் சரியான தகவல் கொடுக்க இயலவில்லை என்பதும் முற்றிலும் தவறாகும் என்றும், தாவா 07.02.2023-ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக டிஸ்டமிஸ் பார் டிபால்ட் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது உண்மை என்றும், மேற்படி வழக்கில் ஏற்பட்டுள்ள டிஸ்மிஸ் பார் டிபால்ட் உத்தரவு மனுதாரரால் வேண்டுமென்றே ஏற்பட்டவை அல்ல என்பதும் மனுதாரரின் சக்திக்கு அப்பாற்பட்டு ஏற்பட்டவை என்பதும் மேற்படி வழக்கில் மனுதாரருக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது என்பதும் மேற்படி வழக்கை எப்போதும் நடத்த மனுதாரர் தயாராக உள்ளார் என்பதும் ஆகவே தாவாவை கோப்புக்கு எடுக்க வேண்டுமென்பதும் தவறாகும் என்றும், தாவாவை நடத்தினால் மனுதாரருக்கு வெற்றி பெறும் வாய்ப்பு சிறிதும் இல்லை என்பதால் மனுதாரர் வேண்டுமென்றே தாவாவை/நடத்தாமல் தள்ளுபடிக்கு விட்டுவிட்டு தற்பொழுது பொய்யான சங்கதிகளுடன் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, கனம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபித்துள்ளார்.

**8.** வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு கட்டாய விசாரணைக்காக 07.02.2023 ம் தேதியில்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.26 17:04:01 +0530

வாய்தா போடப்பட்டிருந்தபோது அன்றைய தினம் மனுதாரர்/வாதி வியாபார சம்மந்தமாக வெளியூரில் இருந்ததால் வழக்கறிஞருக்கு உரிய தகவல் கொடுக்கவில்லை என்றும், அதனால் அன்றைய தினம் தனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கை நடத்த தயாராக இருப்பதாகவும் 07.02.2023 ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் மனுதாரர்/வாதி தரப்பில் கூறியுள்ளார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் மனுதாரர்/வாதி கூறுவது பொய் என்றும், மனுதாரர்/வாதி வேண்டுமென்றே இம்மனுவை காலம்கடத்துவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டார். வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது எதிர்மனுதாரர்/பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்த பிறகு 19.02.2018 ம் தேதியில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு 02.07.2018 ம் தேதியில் வழக்கின் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. பின்னிட்டு 31.10.2018, 21.12.2018, 13.03.2019, 13.06.2019, 09.09.2019, 02.12.2019, 25.02.2020, 23.04.2022, 08.08.2022, 31.10.2022, 30.01.2023, 07.02.2023 ஆகிய தேதிகளில் தொடர்ச்சியாக வாய்ப்புகள் கொடுக்கப்பட்டு தான் இந்த வழக்கு 07.02.2023 ல் கட்டாய விசாரணைக்காக போடப்பட்ட நிலையில் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கை விசாரிக்க தயாராக இல்லாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. மனுதாரர்/வாதி தற்போது வழக்கை நடத்த தயாராக இருப்பதாக கூறுவதால் நீதியின் நலனை கருத்தில் கொண்டு மனுதாரர்/வாதிக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

<u>**நிபந்தனைகள்**:-</u>

(i). மனுதாரர்/வாதி செலவுத்தொகையாக **ரூ.5,000/-ஐ** (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) வரும் **18.03.2026** ம் தேதி எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு செலுத்த வேண்டும் என்றும்,



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.26 17:04:04 +0530

மற்றொரு **ரூ.5,000/-ஐ** (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) தருமபுரி, மாவட்ட சட்டப்பணி ஆணைக்குழுவில் செலுத்தி அதற்கான இரசீதுடன் குறிப்பாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டுமெனவும், அவ்வாறு மொத்த செலவுத்தொகை **ரூ.10,000/-** மேற்குறிப்பிட்ட உத்தரவின்படி செலுத்த தவறினால் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

(ii) இம்மனுவை **அழைக்க வாய்தா: 18.03.2026.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.26 17:04:07 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**<u>இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>** : -

--- இல்லை ---

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.26 17:04:10 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.